# ஊடகத் தமிழ்

தொகுப்பாசிரியர்கள்

**முனைவர் சே.திருநாவுக்கரசு**

உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை

தாகூர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி

குரோம்பேட்டை சென்னை.

**முனைவர் ச.இரா.செம்மலர்**

உதவிப்பேராசிரியர்

நியூ பிரின்ஸ் ஸ்ரீ பவானி கலை மற்றும் அறிவியல் கல்லூரி,

மேடவாக்கம், சென்னை.

**அகில் பதிப்பகம்**

சென்னை

பதிப்பாண்டு : 2026

# ஊடகத் தமிழ்

தொகுப்பாசிரியர்கள்
**முனைவர் சே.திருநாவுக்கரசு**
**முனைவர் ச.இரா.செம்மலர்**

* பக்கம் : 184
* அளவு : டெம்மி, 12.5 புள்ளி
* தாள் : என்.எஸ்.புக் பிரிண்ட்
அச்சு : வசந்தம் அச்சகம், சென்னை.
* நூல் வடிவமைப்பு : கா.பாத்திமா
அட்டை வடிவமைப்பு : கா.பாத்திமா

வெளியீடு
**அகில் பதிப்பகம்**
நெ. 44/2, நாயக்கமார் தெரு,
மேற்கு மாம்பலம், சென்னை- 33.

**ISBN : 978-81-69145-01-5**

**விலை : ரூ. 185/-**



**முனைவர் அ. புருஷோத்தமன்**
முதல்வர்
தாகூர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி
குரோம்பேட்டை, சென்னை - 44.

## வாழ்த்துரை

**மொ**ழி என்பது ஒரு சமூகத்தின் அடையாளம்; ஊடகம் என்பது அந்த மொழியின் உயிரோட்டத்தை மக்களிடம் கொண்டு சேர்க்கும் வலிமையான கருவியாகும். காலமாற்றத்திற்கு ஏற்ப அச்சு ஊடகங்கள், வானொலி, தொலைக்காட்சி, இணைய ஊடகங்கள், சமூக ஊடகங்கள் என ஊடக உலகம் பல்வேறு பரிணாமங்களை அடைந்துள்ளது. இந்த வளர்ச்சிப் பயணத்தில், தமிழ் மொழியின் தனித்து வத்தையும் செம்மையையும் காக்கும் வகையில் ஊடகத் தமிழ் தொடர்ந்து வளர்ந்து வருவது குறிப்பிடத்தக்கதாகும்.

**“ஊடகத் தமிழ்”** என்னும் இந்நூல், தமிழ் ஊடகங்களின் மொழிநடை, வளர்ச்சி, சமூகப் பங்களிப்பு, இலக்கியப் பங்களிப்பு மற்றும் தகவல் தொடர்பியல் சார்ந்த பல்வேறு கருத்துகளை ஆய்வுப் பார்வையுடன் தொகுத்து வழங்கியுள்ளது. இந்நூலில் இடம்பெற்றுள்ள கட்டுரைகள், மாணவர்கள், ஆய்வாளர்கள், ஆசிரியர்கள், ஊடகத் துறையினர் மற்றும் தமிழ் ஆர்வலர்கள் அனைவருக்கும் பயனுள்ள தகவல்களையும் புதிய சிந்தனைகளையும் வழங்கும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

தற்காலச் சூழலில் ஊடகங்களின் தாக்கம் நாளுக்கு நாள் அதிகரித்து வரும் நிலையில், ஊடகங்களில் தமிழ் மொழி எவ்வாறு பயன்படுத்தப்படுகிறது, அதன் வளர்ச்சி எவ்வாறு அமைகிறது, சமூக மாற்றங்களில் ஊடகங்களின் பங்கு என்ன என்பன போன்ற கேள்விகளுக்கு விடையளிக்கும் வகையில்

# இணைய இதழ்களின் தோற்றமும் வகைப்பாடும்

**முனைவர் நா. தீபாராணி**
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
வேல்ஸ் அறிவியல் தொழில்நுட்ப மற்றும்
உயர் ஆராய்ச்சி நிறுவனம்
பல்லாவரம், சென்னை.
kalkideepa89@gmail.com

**பொ.குபேந்திரன்**
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
வேல்ஸ் அறிவியல் தொழில்நுட்ப மற்றும்
உயர் ஆராய்ச்சி நிறுவனம்
பல்லாவரம், சென்னை.

## முன்னுரை

இணைய இதழ்கள் என்பன இணைய அளவில் வெளிவரும் இதழ்களாகும்.இவைஅச்சிதழ்கள் போன்றனவே என்றாலும் இவை இணையப் பரப்பில் இணைய வாசகர் களால் மட்டுமே அறியப்படக் கூடிய இதழ்களாகும். தமிழில் இவ்வகையில் LIGO இதழ்கள் செயல்பட்டு வருகின்றன.

இணைய தளத்தினை உருவாக்கி, அதற்கான பெயர் பதிவு, இடஅளவு ஆகியன பெற்றுச் செய்திகளை இதழ் வடிவில் தருவன இணைய இதழ்கள் ஆகும். இவை மாத, வார, இரு வார இதழ்கள் என்ற நிலையில் தமிழில் வளர்ந்து வருகின்றன.

இணைய இதழ்கள் பற்றி இக்கட்டுரை அமைவதால் அது பற்றிய செய்திகளை விரித்து வழங்குவதாக இதன் தொடர் பகுதிகள் அமைக்கப்பெற்றுள்ளன.

## இணைய இதழ்களின் தோற்றமும் வகைப்பாடும்

தன் தமிழ்ச் சொந்தங்களை விட்டு அயலகம் சென்ற தமிழர்கள் தமிழைப் பார்க்கவும் பேசவும் வசதியற்றிருந்த சூழலில் இணையம் அவர்களது புகலிடமானது. மின்னஞ்சல் மூலம் தங்களுக்குள் அவர்கள் ஏற்படுத்திக்கொள்ள விரும்பிய தொடர்பு சாத்தியமானது. இந்த முயற்சி மெல்ல வளர்ந்து தற்பொழுது இணைய இதழ்களாக வளர்வு பெற்றுள்ளன.

## உலகின் முதல் தமிழ் இணைய இதழ்

* இணையத்தில் தமிழை வெளிநாட்டுத் தமிழர்கள் 1986 முதல் பயன்படுத்தத் தொடங்கிவிட்டனர். முதல் கட்டத்தில் தாங்கள் கண்டுபிடித்த தமிழ் எழுத்துக்களைப் பயன்படுத்தி மின்னஞ்சல் அனுப்பித் தங்களுக்குள் உறவை வளர்த்து வந்தனர்.

*1992-93* ஆம் ஆண்டுகளில் எஸ்.சி. தமிழ் இலக்கிய மன்றம், 'அ' என்று ஒரு தமிழ் இலக்கிய மின்னிதழை நடத்தியது. ஆசிரியர் குழுவில் இருந்தவர்கள்: அருள் சுரேஷ், வைத்தியநாதன் ரமேஷ், எம்.சுந்தர மூர்த்தி, சுந்தரபாண்டியன், விக்னேஸ்வரன் ஆகியோர். இதுதான் முதல்தமிழ் மின்னிதழாக இருக்கவேண்டும் என்று கு.கல்யாணசுந்தரம் தெரிவிக்கிறார்"[1] (ப.சோழநாடன் இன்டர்நெட் உலகில் தமிழ் தமிழன் தமிழ்நாடு ர-ம ரிஷபம் பதிப்பகம் சென்னை 600078 முப்ப டிசம்பர் 2000.) என்ற கருத்து தொடக்ககாலத் தமிழ் இணைய முயற்சிகளைக் காட்டுகிறது.

தொடக்க கால இதழ்கள் பற்றி மாலன் பின்வருமாறு கருத்துரைக்கிறார். "அமெரிக்காவில் உள்ள புளோரிடா பல்கலைக் இதழியலில் முதுகலை வகுப்பில் நான் பயின்ற காலம். *1993* டிசம்பர் முதல் *1994* மார்ச் ஆகிய காலம் ஆகும். மாணவர்களாகிய நாங்கள் மின்னிதழுக்கான முன்மாதிரியை உருவாக்கினோம். அப்பொழுது குறும்பரப்பு வலையமைப்பில் (LAN) பி.பி.எஸ் (B.B.S. Bulletin Board System) என்ற செய்தி ஏடு வந்தது.

**இணையத்தில் மட்டும் வெளிவரும் இதழ்கள்**

இணைய வாசகர்களை மட்டும் எட்டும் எண்ணத்தில் இணையத்தில் மட்டும் நூற்றுக் கணக்கான இதழ்கள் வெளிவருகின்றன. இணையத்தில் மட்டும் வெளிவரும் இதழ்களையே இணைய இதழ்கள் என்ற சொற்றொடர் குறிக்கிறது. இவை பற்றிய அறிமுகச் செய்திகளை வேண்டுமானால்

அச்சிதழ்களில் பெறலாமே தவிர இவற்றைக் கணினி மற்றும் இணைய இணைப்பு ஆகிய அடிப்படை வசதிகள் இருந்தால் மட்டுமே பெற இயலும் இணைய இதழ்கள் பெரும்பாலும் இலாப நோக்கற்றனவாக உள்ளன. இவற்றில் பெரும்பாலும் விளம்பரங்கள் இடம் பெறுவதில்லை பிரபல எழுத்தாளர்களும் இணைய இதழ்களில் எழுதுகிறார்கள் என்றாலும் அவர்களின் படைப்புகள் மட்டுமே இடம் பெறுவதில்லை உலகம் சார்ந்த புதிய புதிய தமிழ்ப் படைப்பாளிகள் இவற்றில் எழுதுகின்றனர். உலக நோக்கமுடையவை?க இணைய இதழ்கள் செயல்படுகின்றன. மேலும் இவை எல்லை கொண்டு வலையேற்றப்பெறுகின்றன. குறிக்கத்தக்க

இணைய இதழ்கள் என்ற இந்த வரையறையை மட்டும் கொண்டு இவ்வாய்வு செய்யப் பெறுவதால் அவற்றுள் தொடர்ந்து வெளிவந்து கொண்டிருக்கும் இதழ்களில் ஏழு இதழ்களைக் கொண்டு இங்கு அவற்றின் வடிவமைப்பு ஆராயப் பெறுகின்றது. இதுவே ஆய்வுக்கள எல்லையும்

இணையத்தில் மட்டும் வெளிவரும் இதழ்கள் நூற்றுக் கணக்காக இருந்தாலும் பல்வேறு காரணங்களால் அவை தொடர்ந்து வெளிவராமல் காணாமல் போய்விடுகின்றன. அவ்வகையில் தோழிகாம் போன்ற இணைய இதழ்கள் காணாமல் போய்விட்டனவற்றில் குறிக்கத்தக்கன.

இணைய இதழ்களில் நாளிதழில் கீற்று இதழும், வார இதழ்களில் திண்ணை, வார்ப்பு (கவிதையிதழ்), மாதமிருமுறை வெளிவரும் அப்புசாமி.காம் (நகைச்சுளை இதழ்) மாத இதழ்களில் பதிவுகள் (தற்போது உடனுக்குடன் வரலாறு (வரலாற்றுச் செய்திகள் இதழ்) சிராய் இலக்கியம் இடைவெளியில் வெளிவரும் ஊடறு (பெண்கள் இதழ்) ஆகியவற்றின் வடிவமைப்பு பற்றிய செய்திகள் இங்குத் தொகுத்துத் தரப்படுகின்றன.

பெரும்பாலும் இணைய இதழ்களில் முகப்புப் பக்கமே இதழுக்கான இணைப்பைச் சொடுக்கியவுடன் கிடைக்கிறது. முகப்புப் பக்கத்திலிருந்து பிற பக்கங்களுக்கான இணைப்பைப் பெற முடிகிறது. ஆதலால் இணைய இதழ்களில் முகப்பு வடிவமைப்பு வாசகர்களைக் கவர்வதிலும் வசதிகளை வழங்குவதிலும் முக்கியப் பங்காற்றுகிறது. இணைய இதழ்கள் முகப்பு வடிவமைப்பை எளிமையாகவும், தெளிவாகவும், அழகாகவும் அமைப்பதுடன் அடிக்கடி முகப்பு பக்கங்களை மாற்றுவதும் நடைபெறுகிறது.

**இணைய இதழ்களின் வடிவமைப்பு :**

கட்டுரைக் எடுத்துக்கொள்ளப்பெற்ற ஏழு இதழ்களில் ஒன்றின் வடிவமைப்பு பற்றிய பொதுக்கருத்துக்களைப் பெறும் பொழுது அவை இணைய இதழ்களுக்கான வடிவமைப்பு என்ற பொதுவரையறையைத் தரத்தக்களவாக இருக்கும். அவ்வகையில் ஒவ்வொரு இதழின் முகப்பு வடிவமைப்பு பக்க வடிவமைப்பு செய்திகள் வடிவமைப்பு என்ற வரிசையில் செய்திகள் ஆராயப்படுகின்றன.

**(www.keetru.com):**

“மறந்து கொண்டே இருப்பது மக்களின் இயல்பு நினைவுபடுத்தித் தூண்டிக்கொன்டே இருப்பது எம் கடமை” என்ற குறிக்கோளுடன் இயங்கியரும் இணைய இதழ் கீற்று

ஆகும். ஜூலை 2005 ஆம் ஆண்டு முதல் இது தொடங்கப் பெற்றது. இது சென்னையிலிருந்து வெளிவருகிறது.

இதன் ஆசிரியர் குழுவில் கீற்று நந்தன், ரமேஷ், பாஸ்கர், பிரியா ஆகியோர் இடம்பெற்றுள்ளனர். "ஆசிரியர் குழு என்ற ஒன்று இருந்தாலும் பெரும்பாலான நேரங்களில் கீற்று நந்தனே நாள்தோறும் செய்திகளை வலையேற்றம் செய்கிறார் என்ற கருத்து இங்குக் கருதத் தக்கது.

இவ்விதழ் பொருளாதாரப் பிரச்சனை காரணமாக இடையில் சில காலம் நிறுத்தப்பட்டு வாசகர்களின் பொருளுதவியுடன் தற்போது தொடர்ந்து வெளிவருகிறது. நாவதோறும் செய்திகள் வலையேற்றம் பெறுகின்றன. இதனுள் யுனிகோடு எழுத்துரு பயன்படுத்தப்படுகிறது செய்யப்

படைப்பாளிகளே தங்கள் படைப்புகளை வலையேற்றும் செய்யும் வசதியை இவ்விதழ் தருகிறது" இது மற்ற இணைய இதழ்களில் வழங்கப் பெறாத ஒரு வசதியாகும். ஆசிரியரின் மின்னஞ்சல் முகவரி editor @keetru.com

**கீற்று இணைய இதழின் முகப்புப் பக்கம் :**

கீற்று இணைய இதழின் முகப்புப் பக்கத்தைத் திறந்தவுடன் தலைப்புப் பட்டியில் தலைப்பு குறிக்கோள், கீற்று இதழின் பகுதிகளில் தேடுவதற்கான கூகிள் தேடுபொறி வசதி, வாசகர்களின் பொருளுதவியை வேண்டும் 'கீற்றினை வளர்தெடுக்க உதவுங்கள்' மன்ற வேண்டுகோள்" செய்திக்கான இணைப்பு ஆகியன அமைந்துள்ளன.

இறுதியில் இதழின் காப்புரிமை குறித்த செய்திகள் இடம் பெற்றுள்ளது. 'ஊடறு இணைய இதழின் இயங்குபரப்பாக தமிழ் பெண்களது வெளிப்பாடுகளை ஈழம், புலம்பெயர், தமிழகம் என மூன்று தலத்தில் ஒருங்கிணைத்து வந்துள்ளது' எனத் தன் கட்டுரையில் குறிப்பிடுகிறார் யதிந்திரா. பெண் பிரச்சனைகளைப் பற்றிப் பேசினாலும் ஈழசார்ந்த பதிவுகள் இவ்விதழில் பெருமளவு இடம்பெற்றுள்ளன".

**முடிவுரை**

இவ்வாறு இணைய இதழ்களின் முகப்புப் பக்க வடிவமைப்பு, பிற பக்கங்களின் வடிவமைப்பு செய்திகள் வடிவாமப்பு ஆகியவை அமைகின்றன. இணைய இதழ்கள் தங்களின் தவித்த வடிவமைப்புத் தரத்தாலும், பல்வேறு இணைய வசதிகளைத் தருவதாலும் வாசகர்களைக் கவர முயல்கின்றன.

**துணைநூற்பட்டியல்**


1. முனைவர் மு.இளங்கோவன் இணையம் கற்போம் ப-47 வயல்வெளிப் பதிப்பகம் இடைக்கட்டு அரியலூர் 612 901 செம்பதிப்பு 2010.
2. முனைவர் மு. பழனியப்பன் கணினியும் இணையமும் ப.84 மீனாட்சி நூலகம், புதுக்கோட்டை 1 Ka
3. ப.சோழநாடன் இன்டர்நெட் உலகில் தமிழ் தமிழன் தமிழ்நாடு ரிஷபம் பதிப்பகம், சென்னை 600078 முப்ப டிசம்பர் 2000.
4. அண்ணா கண்ணன் தமிழில் இணைய இதழ்கள் 0-23 அமுதகரபி 102